

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | facebook.com/murasoli180 | twitter.com/murasoli180 | instagram.com/murasoli180 | youtube.com/murasoli180 | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 263 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – சித்திரை 21 – வியாழக்கிழமை 04 மே 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 263 : Thiruvalluvar Year - 2054 - Chithirai 21 - Thursday 04 May 2023 - Chennai 16 Pages ₹ 5.00


## ஜம்மு - காஷ்மீரில் தேர்தலை நடத்த பா.ஜ.க. விரும்பவில்லை!

### முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா பேட்டி!

ஸ்ரீநகர், மே 4-

தேசிய மாநாட்டுக் கட்சி தலைவர் உமர் அப்துல்லா அனந்த்நாக் மாவட்டத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-



ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் தேர்தலை நடத்துவதற்கு பா.ஜ.க. விரும்பவில்லை. ஏனென்றால், தேர்தலில் தோற்றுவிடுவார்கள் என்பது அவர்களுக்கு தெரியும். மக்களை சந்தித்து வாக்கு கேட்கும் தைரியம் அவர்களுக்கு இல்லை. தேர்தலுக்காக பிச்சை எடுக்க நாங்களும் தயாராக இல்லை. தேர்தலை நடத்தினால் நல்லது.

பா.ஜ.க. தேர்தலை விரும்பவில்லை என்பதால், தேர்தல் நடத்துவதற்கு தேர்தல் ஆணையத்திற்கு ஒன்றிய அரசு பச்சைக்கொடி காட்டவில்லை என்பது வெளிப்படையாக தெரிகிறது. கடந்த சில ஆண்டுகளாக தேர்தல் ஆணையம் தனது சொந்த முடிவை எடுக்கவில்லை. எப்போது முடிவெடுத்தாலும் ஒன்றிய அரசுடன் கலந்தாலோசித்து அதன்பிறகே முடிவெடுக்கிறது என்று கூறினார்.

### உதவி - இணை பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் பிற பணியிடங்களுக்கு என

# அண்ணா பல்கலைக் கழகத்தில் - 161 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மே 4-**

**அண்ணா பல்கலைக்கழகத்தில் உதவி பேராசிரியர்கள், இணை பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் பிற பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 161 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (3.5.2023) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் அண்ணா பல்கலைக்கழகத்தில் உதவி பேராசிரியர்கள், இணை பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் பிற பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 161 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர் கல்வியை பயில்வதற்கு புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்விச் சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (3.5.2023) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் அண்ணா பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் பிற பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 161 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், உயர்கல்வித் துறை கூடுதல் செயலாளர் எஸ்.பழனிசாமி, அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ரா.வேல்ராஜ், பணியமர்த்தல் பிரிவு இயக்குநர் முனைவர் ஜெ.பிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அந்த வகையில், அண்ணா பல்கலைக் கழகத்தின் கிண்டி பொறியியல் கல்லூரி, எம்.ஐ.டி. கல்லூரி, அழகப்பா செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கட்டடக் கலை மற்றும் திட்டமிடல் பள்ளி (School of Architecture & Planning) ஆகிய நான்கு கல்லூரிகளிலும் காலியாக உள்ள உதவிப் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் உடற்கல்வி துணை இயக்குநர், துணை நூலகர் போன்ற பிற பணியாளர் பணியிடங்களுக்கு எட்டு ஆண்டுகளுக்கு பிறகு வெளிப்படைத் தன்மையுடன் தேர்வுக் குழுக்களால் தேர்வு செய்யப்பட்ட 161 நபர்களுக்கு 20.04.2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அண்ணா பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

தேர்வு செய்யப்பட்ட 161 உதவி பேராசிரியர்கள், இணை பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் பிற பணியாளர் பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக முதல்வர் அவர்களால் நேற்றைய தினம் 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், உயர்கல்வித் துறை கூடுதல் செயலாளர் எஸ்.பழனிசாமி, அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர் ரா. வேல்ராஜ், பணியமர்த்தல் பிரிவு இயக்குநர் முனைவர் ஜெ. பிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னையின் குடிநீர்த் தேவைக்கு கிருஷ்ணா நதி நீர் திறப்பு!

சென்னை, மே 4-

சென்னையை அடுத்த பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம், கடலூர் மாவட்டம் வீராணம் ஆகிய அணைகளில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் மூலம் சென்னை நகரின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

இந்த அணைகளில் தற்போது 7 ஆயிரத்து 496 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. இது, மொத்த கொள்ளளவில் 64 சதவீதம் ஆகும். கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக தெலுங்கு கங்கை



திட்டத்தின் மூலம் ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா ஆற்று நீர் தமிழகத்துக்கு வழங்கப்படும்.

தற்போது கோடை காலம் என்பதால் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் நீர்மட்டத்தை உயர்த்தி தண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக கண்டலேறு அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட தமிழக அரசின் நீர்வள ஆதாரத்துறை ஆந்திர அரசுக்கு கோரிக்கை விடுத்தது.

அதன்படி கண்டலேறு அணையில் இருந்து கடந்த 1ந் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் ஓரிரு நாட்களில் தமிழக எல்லையான திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் மிக முக்கியமான தேர்தல்! இந்தத் தேர்தலில் - ஒட்டுமொத்த

# இந்தியாவையே வழிநடத்தும் நம்பிக்கைக்குரிய தலைவராக - நமது முதல்வர் திகழ்கிறார்!

## சேலத்தில் - திராவிடர் விடுதலைக் கழக மாநாட்டில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

**சேலம், மே 4-**

**சேலத்தில், திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய, “இது தமிழ்நாடு!’ இளம் தலைமுறையின் எச்சரிக்கை!” எனும் தலைப்பில் நடைபெற்ற இரண்டு நாள் மாநாட்டின் நிறைவாக எழுச்சியுரையாற்றிய கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல், மிக மிக முக்கியமான தேர்தல். இந்தத் தேர்தலில் ஒட்டுமொத்த இந்தியாவையே வழிநடத்துகிற நம்பிக்கைக்குரிய தலைவராக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள்!” என்று குறிப்பிட்டார்.**

சேலத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய, ‘இது தமிழ்நாடு!’ மாநாட்டில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

**“சனாதனத்தை வேரறுப்போம்!**

**வெறுப்பு அரசியலை வீழ்த்துவோம்!**





**மாநில உரிமைகளைப் பாதுகாப்போம்!”**

இந்த முழக்கங்களோடு திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் ‘இது தமிழ்நாடு!’ இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநில மாநாட்டில் பங்கேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

### கொள்கையை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்போம்!

இந்த இரண்டு நாள் மாநாடு மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு பல்வேறு முன்னணிப் பேச்சாளர்கள் பங்கேற்று கருத்துரை வழங்கியுள்ளனர். திராவிட இயக்கப் பேச்சாளர்கள் மட்டுமன்றி இடதுசாரி இயக்கத்தின் பேச்சாளர்கள், தலித் இயக்கங்களின் முன்னோடிகள், அம்பேத்கரியச் சிந்தனையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டை மிகச்சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்தக்கூடிய அண்ணன் கொளத்தூர் மணி அவர்களுக்கும், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களுக்கும் எனது வாழ்த்துகள். குறிப்பாக, இது போன்ற மேடைகள்தான் நம்முடைய கொள்கையை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு போய் சேர்க்கும்.

இளைஞர்களுக்கு நம்முடைய கருத்துகளை, கொள்கைகளை விளக்கிச் சொல்ல வேண்டும் என்பதற்காகதான் மாநில சுயாட்சி, திராவிட இயக்க வரலாறு போன்ற தலைப்புகளில் தி.மு.க. இளைஞரணி சார்பில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் திராவிட மாடல் பயிற்சிக் கூட்டங்களை நடத்தினோம்.

### ஒன்றியங்கள் தோறும் பாசறைக் கூட்டங்கள்!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் அண்ணன் கொளத்தூர் மணி அவர்கள்கூட அதில் கலந்துகொண்டு இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தார். இந்த நேரத்தில் அதற்கு அண்ணன் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது திராவிட மாடல் பயிற்சிக் கூட்டங்களை ஒவ்வொரு ஒன்றியத்திலும் நடத்த திட்டமிட்டு இருக்கிறோம்.

‘இது தமிழ்நாடு!’ எனும் தலைப்பில் நடக்கும் இந்த மாநாட்டில், தமிழ்நாடு என்று நம் மாநிலத்துக்கு பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா தொடர்பான ஒரு சம்பவத்தை நினைவுகூர்ந்து எனது உரையை தொடங்குகிறேன்.

1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறை ஆட்சி அமைத்திருந்தது. பேரறிஞர் அண்ணா முதலமைச்சர் ஆனதும், தந்தை பெரியார் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியை அண்ணாவுக்கு அனுப்பினார். அப்போது, அண்ணாவுக்கு இந்தியாவின் பல இடங்களில் இருந்தும் மாலைகள், சால்வைகள், வாழ்த்துச் செய்திகள் வந்து கொண்டிருந்தன.


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்